செ.வெ.எண்:04 நாள்: 02.10.2020

# அரியலூரில் அண்ணல் காந்தியடிகளின் பிறந்த நாளை முன்னிட்டு தீபாவளி கதர் சிறப்பு விற்பனையினை மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன் அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

அரியலூர் புதிய மார்கெட் தெருவில் கதர் அங்காடி வளாகத்தில் அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழாவை முன்னிட்டு அண்ணல் காந்தியடிகளின் திருவுருவப்படத்தினை திறந்து வைத்து, மலர் தூவி மரியாதை செலுத்தி, தீபாவளி சிறப்பு விற்பனையினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தலைமையில், மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

இவ்விழாவில், ஜெயங்கொண்டம் சட்டமன்ற உறுப்பினர் **திரு.ஜெ.கே.என்.ராமஜெயலிங்கம்** அவர்கள் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் **திரு.வீ.ஆர்.சீனிவாசன்** அவர்கள் முன்னிலை வகித்தார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் தெரிவித்ததாவது:-**

கதர் ரகங்களை தயாரிப்பதில் இந்தியாவிலேயே தமிழகம் முன்னோடி மாநிலமாக திகழ்கிறது. மக்களின் மனதை கவரும் வண்ணம் புதிய வடிவமைப்புகளில் நெசவு செய்யப்படும் கதர் ஆடைகளும், கிராமங்களில் வாழும் கைவினை இளைஞர்களால் புதிய உத்திகளுடன் தயாரிக்கப்படும் கவினை பொருட்களும் தமிழகத்தில் உள்ள கதர் அங்காடிகள் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

காதிகிராப்ட் கதர் விற்பனை நிலையத்தில் தரமிக்க கதர் வேஷ்டிகள், துண்டு ரகங்கள், ரெடிமேட் சட்டைகள், மெத்தை, தலையணைகள், பெட் ஷீட்கள், கண் கவரும் கதர் பட்டு ரகங்கள், கதர் பாலியஸ்டர் மற்றும் உல்லன் ரகங்கள் மற்றும் தேன், குளியல் சோப்புகள், சாம்பிராணி பூஜை பொருட்கள் பனைவெல்லம், பனை பொருட்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இதற்காக மத்திய, மாநில அரசுகளின் உதவி பெறும் கதர், பட்டு மற்றும் பாலிவஸ்திரா ரகங்களுக்கு 30 சதவீதமும், உல்லன் ரகங்களுக்கு 20 சதவீதமும் சிறப்பு தள்ளுபடி அனுமதிக்கப்படுகிறது. அரசு துறைகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு மாத ஊதியத்தில் 10 சம தவணைகளில் பெற்றிடும் வகையில் கடனுக்கும் கதர் ரகங்கள் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

மேலும், அரியலூர் மாவட்டத்தில் கதர் விற்பனை நிலையத்தின் மூலம் தீபாவளி சிறப்பு விற்பனை ரூ.20 இலட்சம் இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. எனவே, அரியலூர் மாவட்டத்திலுள்ள அனைத்து அரசுத்துறை நிறுவனங்கள், பணியாளர்கள், ஆசிரியர்கள், நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் போக்குவரத்து கழக ஊழியர்கள் மற்றும் பொதுமக்கள் கதர், பட்டு, பாலியஸ்டர், உல்லன் ரகங்கள் மற்றும் கிராம பொருட்கள் தள்ளுபடி விலையில் கொள்முதல் செய்து பயனடைவதுடன் இம்மாவட்டத்திற்கு நிர்ணயம் செய்யப்பட்ட விற்பனை குறியீட்டினை எய்திட ஒத்துழைப்பு அளிக்குமாறு மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா **திரு.தாமரை.எஸ்.இராஜேந்திரன்** அவர்கள் கேட்டுக்கொண்டார்கள்.

பின்னர், கொரோனா பேரிடர் காலத்தில் சிறப்பாக பணியாற்றிய 3 துப்புரவு மேற்பார்வையாளர்கள் மற்றும் ஒரு களப்பணி ஆய்வாளருக்கும், மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் சாலையோர வியாபாரிகள் மேம்பாட்டுத்திட்டத்தின்கீழ் 2 குழுத்தலைவர்களுக்கும் மாண்புமிகு அரசு தலைமைக்கொறடா அவர்கள் சால்வை அணிவித்து கௌரவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஊராட்சி குழுத்தலைவர் பொ.சந்திரசேகர், ஒன்றியக்குழுத்தலைவர் பு.செந்தமிழ்செல்வி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் க.சரவணன், நகராட்சி ஆணையர் குமரன், உதவி இயக்குநர் (கதர் கிராமத்தொழில்கள்) க.செந்தில்குமார், வட்டாட்சியர் சந்திரசேகரன், அரியலூர் காதிகிராப்ட் மேலாளர் சு.முத்துப்பழனு, மற்றும் முக்கிய பிரமுகர்கள், அரசு ஊழியர்கள், பொதுமக்கள் பலர் கலந்துகொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**